**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**
**அ.வ.எண்.13/2019**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி பி. கௌசல்யா, உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு சாட்சி 1 வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2021 ஆண்டு ஆகஸட் மாதம் 31 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர் . | ஸ்ரீதேவி | மதம் . |
| க/பெ . | வெங்கடேஸ்வர ராவ் | ஜாதி . |
| வயது . | 36 | கிராமம் . |
| தொழில் | | வட்டம் . |

**வாதி தரப்பு 1வது சாட்சியின் முதல் விசாரணை**

பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்குத் தெரியும். கடந்த 30.4.2012 என் தாத்தா எனக்கு எழுதி கொடுத்த தான பத்திரம் அசல் வா.த.சா.ஆ.1 குறியிடுகிறேன். என் பெயரில் உள்ள பட்டா வா.த.சா.ஆ.2 குறியிடுகிறேன். கடந்த 6.3.2018ல் செலுத்திய வீட்டு ரசீது வா.த.சா.ஆ.3 குறியிடுகிறேன். என் தாத்தா பாட்டி வழக்கு சொத்து மற்றும் பிற சொத்துகளை அவர்களுடைய 4 மகளுக்கு கடந்த 28.10.2010ல் எழுதி கொடுத்த பதிவு செய்யப்பட்ட உயில் வா.த.சா.ஆ.4 குறியிடுகிறேன். கடந்த 14.7.2011ல் உயிலை ரத்து செய்த பதிவு செய்யப்பட்ட உயில் ரத்து பத்திரம் அசல் வா.த.சா.ஆ.5 குறியிடுகிறேன். கடந்த 30.1.2012ல் 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த தான பத்திர சான்றிட்ட நகல் வா.த.சா.ஆ.6 குறியிடுகிறேன். 1, 2 பிரதிவாதிகள் ஏற்கனவே தாக்கல் செய்த அ.வ. 40/2012ன் பிராதின் சான்றிட்ட நகல் வா.த.சா.ஆ.7 குறியிடுகிறேன். அசல் வழக்கு 40/2012 ரத்து செய்யப்பட்ட (under order 7 rule 11) மனுவின் உத்தரவின் சான்றிட்ட நகல் வா.த.சா.ஆ.8 குறியிடுகிறேன். தாவா படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**